. 4 பக்கங்கள் . விலை ரூ. 5




தின தமிழ்
தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936




www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil
• பதிப்பு : நாகர்கோவில் • 22.04.2026 • மலர் 04 • இதழ்: 112 • Edition : Nagercoil • 22.04.2026 • Vol : 04 • Issue : 112 • Page : 4 • Rs. 5/-

# சென்னை என்றுமே திமுக கோட்டை தான்

## முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்



சென்னை, ஏப். 22

தமிழக சட்டசபை தேர்தல் நாளை மறுதினம் நடைபெற உள்ளது. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் நேற்று மாலை 6 மணியுடன் அரசியல் கட்சிகளின் பிரசாரம் நிறைவடைய உள்ளது. இதனால் நேற்று காலை முதலே அரசியல் கட்சியினர் தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், திமுக தலைவரும், முதல்அமைச்சருமான மு.க.ஸ்டாலின் நேற்று சென்னையின் பல்வேறு இடங்களில் பிரசாரத்தில் ஈடுபட்டார். சோழிங்கநல்லூர், வேளச்சேரி, சைதாப்பேட்டை ஆகிய தொகுதிகளில் திமுக வேட்பாளரை ஆதரித்து வாக்குசேகரிப்பில் ஈடுபட்டார். ஒவ்வொரு தொகுதிகளிலும் மு.க.ஸ்டாலின் நடந்து சென்று மக்களை சந்தித்து வாக்கு கேட்டார்.

முதல்அமைச்சர் சென்ற இடமெல்லாம் அவருக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பிரசாரத்தின் போது குழந்தைகளை தூக்கி முதல்அமைச்சர் கொஞ்சி மகிழ்ந்தார். மேலும் மக்கள், இளம்பெண்கள் என பலரும் முதல்அமைச்சருடன் செல்பி, புகைப்படம் எடுத்து கொண்டனர்.

இந்த நிலையில், இதுகுறித்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "சென்னை என்றுமே தி.மு.க.வின் கோட்டை! சோழிங்கநல்லூர் வேளச்சேரி சைதாப்பேட்டை ஆகிய தொகுதிகளில் மக்கள் அளித்த அன்பும் வரவேற்பும்... "தமிழ்நாடு போராடும்.. தமிழ்நாடு வெல்லும்.." வெல்வோம் ஒன்றாக" என்று பதிவிட்டுள்ளார்.

## மோடி குறித்து கார்கே விமர்சனம்



சென்னை, ஏப். 22

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே சென்னையில் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

தொகுதி மறுவரையறை மசோதாவை எதிர்த்து முதல்முதலாக குரல் கொடுத்தவர் தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்தான். அமலாக்கத்துறை, சிபிஐ, வருமானவரித்துறை ஆகியவற்றை வைத்து எதிர்கட்சிகளை பாஜக மிரட்டுகிறது. அச்சுறுத்துகிறது. அதன் அடிப்படையில் தான் பிரதமர் மோடி ஒரு தீவிரவாதி என கூறினேன்.

அரசு இயந்திரத்தை மோடி தவறாக பயன்படுத்தியதற்கு ஆணையம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். மகளிர் இடஒதுக்கீடு மசோதா கொண்டுவருவதை எதிர்க்கட்சிகள் தடுப்பதாக பாஜக கூறுவது பொய்.

2023 ல் நிறைவேறியதை மீண்டும் தொகுதி மறுவரையறை மசோதாவுடன் சேர்த்து கொண்டுவர முயன்றனர். தொகுதி மறுவரையறை விவகாரத்தில் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஓரணியில் எதிர்த்தோம். எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையை பார்த்து பாஜகவுக்கு பயம். அண்ணா பெயரில் கட்சியை வைத்துக்கொண்டு அதிமுக எப்படி பாஜகவுடன்கூட்டணி வைத்தது? ஏன் என கேள்வி எழுப்பினார்.




## தீயசக்தி திமுக... உங்களின் ஒற்றை தேர்வு விசில் சின்னம்

### தவெக தலைவர் விஜய்

சென்னை, ஏப்.22

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

என் நெஞ்சில் குடியிருக்கும் என் சொந்தங்களாகிய தமிழக மக்கள் அனைவருக்கும் வணக்கம்.

ஆசையோடும் அன்போடும் எனக்காக எல்லாவற்றையும் அள்ளி அள்ளித் தந்த உங்களோடு உங்கள் விஜய் மனம்விட்டுப் பேசவே இக்கடிதம்.... எனக்கு எல்லாமும் தந்த என் சொந்தங்களான தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றிக்கடன் செலுத்தவே அரசியலுக்கு வந்த நாள்முதல் சொல்லொணா நெருக்கடிகளையும் நிர்பந்தங்களையும் சொல்லவியலா வேதனைகளையும் இதுவரை நமக்கு விளைவித்தே வந்தவர்கள் வேறு யார்?.

நமது அரசியல் எதிரியான மக்கள் விரோத தீய சக்தி திமுகவும் கொள்கை எதிரியான மற்றும் பலருடன் களம் காணும் பிளவுவாத சக்தியான பாஜகவும் என்று நம் மக்களே அறிவர். மக்களுக்காக அவர் தம் நலன்களுக்காக மட்டுமே அரசியலுக்கு வந்த இந்த விஜய், பாசிச மனநிலை கொண்ட ஜனவிரோதக் கட்சிகளின் அழுத்தங்களுக்கா அடிபணிவான்?. திசைதிருப்பல் முதலீட்டுக் கழகங்களின் நெருக்கடிகளுக்கும் நிர்பந்தங்களுக்கும் குனிந்து கூழைக் கும்பிடா போடுவான்?.

ஆதாயங்களைக் காட்டி உங்கள் மகனை அடக்கி விடவும் முடியாது. அதிகாரங்களை ஏவி உங்கள் சகோதரனை மிரட்டி விடவும் இயலாது. இறைவன் அருளால் இயற்கையின் துணையுடன் மாபெரும் பெண்கள் சக்தி, மாபெரும் இளைஞர் சக்தி, மாபெரும் மக்கள் சக்தியுடன் உலகெங்கும் உள்ள நமது தோழர்களின் பேராதரவுடன் முதன்மை அரசியல் சக்தியாகக் களத்திற்கு வந்திருக்கும் தமிழக வெற்றிக் கழகத்தின் தமிழக மக்கள் நலன் சார்ந்த நோக்கத்தையும் அதன் தாக்கத்தையும் எந்தக் கொம்பனாலும் அசைக்க முடியாது என்பதை வரும் தேர்தலில் நம் மக்களே அவர்களுக்கு சரியான பாடம் புகட்டி உணர்த்துவர்.

நம்மை எள்ளி நகையாடியக் கூட்டம் மட்டுமன்று, இந்த நாடே அறியும், அளக்க முடியாத ஆழ்கடல் விலக்க முடியாத விரிவானம் த.வெ.க என்று. நேர்மையின் நெருப்புக்கோளம் மக்களின் நெஞ்சில் நீக்கமறக் குடியிருப்பது த.வெ.க என்று. சமூகநீதிக் காவலரண் ஜனநாயகப் பேரரண் த.வெ.க என்று. இப்படிப்பட்ட த.வெ.கவை ஊழல் விஷ சக்திகளாலா வீழ்த்த முடியும்?. பாசிச சக்திகளாலா பகைவெல்ல முடியும்?.

மக்களே... மீண்டும் சொல்கிறேன். இத்தனை நெருக்கடிகளையும் இத்தனை நிர்பந்தங்களையும் இத்தனை வேதனைகளையும் உங்கள் விஜய் தாங்கிக்கொண்டு நிற்க ஒரே ஒரு காரணம்தான் உண்டு. அது உங்களின் உயர்தனி உள்ளன்பு மட்டும்தான். எந்த அரசியல் கட்சி முன்புலமோ பின்புலமோ இன்றி அரசியலுக்கு வந்த என்னை 'நீ வாப்பா'... 'நீ வாதம்பி'...'நீவாண்ணா'... 'நீ வா நண்பா'... 'நீ வா தோழா'... 'நாங்க பாத்துக்கறோம்'... என்ற உங்களின் பேரன்பும் பேராதரவும் மட்டுமே என்னை இயக்கும் மாபெரும் உந்துசக்தி என்பதே உண்மை.

இப்போதும் சொல்வேன். எப்போதும் சொல்வேன். உங்களையும் என்னையும் இந்த உலகத்தில் எந்த அதிகார சக்தியாலும் எந்த அராஜக சக்தியாலும் எந்த தீயசக்தியாலும் எந்த பாசிச சக்தியாலும் எந்த 'மற்றும் பலர்' சக்தியாலும் பிரிக்கவே இயலாது. அப்படிப் பிரிக்க நினைக்கும் அனைத்து சக்திகளையும் மக்கள் அக்குவேறு ஆணிவேறாகத் தனித்தனியாகப் பிரித்து, தூக்கி வீசி எறியப் போவது உறுதி.

பணத்தை மட்டுமே நம்பி தத்தம் சுயலாபங்களுக்காக அரசியல் களமாடும், எதிர்வரும் நம் தலைமுறையின் கனவுகளை அடகு வைக்கத் துடிக்கும் அடிமை அரசியல் சூதாடிகளின் வேறு எந்தச் சின்னத்திற்கு நீங்கள் வாக்களித்தாலும், பிளவுவாத சக்திகளுக்கான மறைமுக அல்லது நேரடி ஆதரவாக மட்டுமே அது மாறும்.

ஆகவே, எப்போதும் போல அடைமழையாக இந்த அரசியல் சூதாடிகளின் ஊழல் லஞ்சக் கொள்ளைப் பண மழை பொழிந்தாலும் வரும் ஏப்ரல் 23ஆம் தேதி அன்று, நீங்கள் அனைவரும் திருவிழாக் கோலம் பூண்டு, விசில்புரட்சிக்குத் தயாராகி, குடும்பம் குடும்பமாக சென்று வாக்களிக்க வேண்டிய, எவ்வித மறு சிந்தனைக்கும் இடம் தராத ஒற்றைத் தேர்வாக "விசில் சின்னம்" மட்டுமே இருக்க வேண்டும் என உங்களை இருகரம் கூப்பி வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

வாகை சூடுவோம்.... வரலாறு படைப்போம்.... வெற்றி நிச்சயம்... இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## எடப்பாடி பழனிசாமி அடுத்த ஜென்மத்தில் குஜராத்தில் பிறந்து கொள்ளட்டும்: கனிமொழி

திருச்செந்தூர், ஏப்.22

திமுக துணை பொதுச்செயலாளரும் தூத்துக்குடி தொகுதி எம்பியுமான கனிமொழி கருணாநிதி திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் அனிதா ராதாகிருஷ்ணனை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது அவர் பேசியதாவது:

சட்டமன்ற தேர்தல் நடக்கும் இந்த நேரத்தில் நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை குறித்த மசோதாவை மோடி அரசு தாக்கல் செய்தது. மோடிக்கு இந்த மசோதாவில் தோல்வி தான் கிடைத்தது. தமிழ்நாட்டின் உரிமைகளை பறிக்கும் இந்த மசோதாவை நம்முடைய முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடுமையாக எதிர்த்து கருப்பு நாள் என்று அறிவித்தார்.

எதிர்கட்சித்தலைவர் நேற்று சேலத்தில் பிரசாரம் செய்த போது அடுத்த ஜென்மத்தில் மனிதனாக பிறக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தால் நான் இந்த தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு குடும்பத்தில் பிறக்க ஆசைப்படுகிறேன் என்று பேசியுள்ளார். எனக்கு அடுத்த ஜென்மத்தில் எல்லாம் நம்பிக்கை கிடையாது. அப்படியே அவர் பிறந்தாலும் தமிழ்நாட்டில் பிறக்க வேண்டாம்.

பாஜகவுக்கு கை கட்டி நிற்கும் பழனிசாமி அடுத்த ஜென்மத்தில் குஜராத்தில் பிறந்து கொள்ளட்டும் என கூறினார்.

## திருவண்ணாமலையில்

## 15 வயது சிறுமி கூட்டு பாலியல் வன்கொடுமை அதிர்ச்சியளிக்கிறது; அண்ணாமலை பேச்சு



சென்னை, ஏப். 22

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாற்றில் 15 வயது சிறுமி கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் திமுக அரசின் சட்டம் ஒழுங்கு தோல்விக்கு முழு சாட்சி என்று தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அருகே, சுபநிகழ்ச்சியில்கலந்துகொள்ளவந்தகாஞ்சிபுரத்தை சேர்ந்த 15 வயது சிறுமிக்கு கூட்டுப் பாலியல் வன்கொடுமை நடந்ததாக வந்துள்ள செய்தி மிகுந்த அதிர்ச்சியும் கோபமும் அளிக்கிறது. இதுபோன்ற கொடூரங்கள் மீண்டும் மீண்டும் நடைபெறுவது, திமுக அரசின் சட்டம் ஒழுங்கு தோல்விக்கு முழு சாட்சி.

தமிழகத்தில் பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பு என்பதே இல்லாத நிலை ஆகிவிட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளில், கட்டுக்கடங்காத போதைப் பொருள் புழக்கம், சட்டத்தின் மீதோ,

காவல்துறை மீதோ, குற்றவாளிகளுக்கு எந்த அச்சமும் இல்லாத நிலை என, தமிழகம் ஒரு இருண்ட நிலைக்குப் போய்விட்டது. இவற்றைச் சரிசெய்து, தமிழகத்தை மீட்டெடுக்கவே, சில காலம் தேவைப்படும். இத்தகைய மோசமான சூழலில், திமுக ஆட்சி, நேற்று தமிழகத்தைத் தள்ளியிருக்கிறது.

இந்த வழக்கில் தொடர்புடைய அனைவரையும் உடனடியாக கைது செய்து, கடுமையான தண்டனை வழங்க வேண்டும். சிறுமிக்கும் குடும்பத்தினருக்கும் முழு பாதுகாப்பும், மனநல ஆலோசனைகளும் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## கோவையின் அனைத்து தொகுதிகளிலும் என்.டி.ஏ. கூட்டணி வெற்றி பெறும்; வானதி சீனிவாசன்

கோவை, ஏப். 22

கோவை வடக்கு சட்டமன்ற தொகுதியில் தேர்தல் பிரசாரத்தின் நிறைவு நாளான நேற்று பாஜக தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன், பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை மற்றும் கூட்டணி கட்சியினர் இணைந்து இருசக்கர வாகன பேரணியை தொடங்கி வைத்தனர்.

கோவை மாவட்டம் முழுவதும் கடந்த முறை போலவே அனைத்து தொகுதிகளிலும் என்.டி.ஏ. கூட்டணி வெற்றி பெறும். அதில் எந்த மாற்றமும் இருக்காது. கடந்த இருதினங்களாக திமுகவின் கரூர் ரவுடி கும்பல் இங்கு வந்து காவல் துறை அதிகாரிகளை மிரட்டி, காவல் நிலையத்திலேயே ரகளை செய்து வருகின்றனர். கோவை மக்கள் மிகவும் அமைதியானவர்கள் தான், வாக்காளர்கள் அனைவரும் இங்கு நடக்கும் அனைத்தையும் பார்த்துவிட்டு தெளிவாக வாக்களிப்பார்கள். திமுகவினர் வாக்காளர்கள் அனைவருக்கும் ஓட்டுக்கு காசு கொடுத்து வருகின்றனர்.

டாஸ்மாக்கில் ஆயிரக்கணக்கான கோடி அளவில் கொள்ளையடித்து விட்டு இப்போது கோவையின் வளங்களை கொள்ளையடிக்க செந்தில்பாலாஜி இங்கு வந்திருக்கிறார். எல்லா இடங்களிலும் போதைப்பொருளை விற்றுவிட்டு அதன் மூலம் திமுகவினர் ஆதாயம் அடைந்து விட்டு இப்போது ஓட்டுக்கு காசு கொடுத்து வருகின்றனர். மக்கள் தெளிவாக சிந்தித்து வாக்களிக்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசியுள்ளார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

# கோணம் அரசு பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணும் மையம்: கலெக்டர் ஆய்வு



நாகர்கோவில், ஏப்.22

குமரி மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு நாளை 23ம் தேதி பொதுத்தேர்தல் நடைபெறுகிறது. இதற்காக மாவட்ட நிர்வாகம் பல்வேறு முன்னேற்பாடு பணிகளை செய்து வருகிறது.

அதன்ஒருபகுதியாக நாகர்கோவில் கோணம் அரசுபொறியியல்கல்லூரியில் அமைக்கப்பட்டு வரும் வாக்கு எண்ணும் மையத்தை நேற்று கலெக்டர் அழகு மீனா நேரில் பார்வையிட்டு ஆய்வுமேற்கொண்டார். தொடர்ந்து அவர் கூறுகையில்:

கோணம் பொறியியல் கல்லூரியின் கீழ் தளத்தில் கன்னியாகுமரி மற்றும் கிள்ளியூர் சட்டமன்ற தொகுதி வாக்கு எண்ணும் மையமும், முதல் தளத்தில் குளச்சல் மற்றும் பத்மநாபபுரம், இரண்டாவது தளத்தில் விளவங்கோடு, நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி வாக்கு எண்ணும் மையமும் அமைக்கப்படவுள்ளது.

அந்தந்த வாக்கு எண்ணும் மையங்களின் அருகாமையில் வாக்கு எண்ணும் இயந்திரங்கள் பாதுகாப்பு வைப்பறை அமைக்கப்படவுள்ளது.

தொடர்ந்து வாக்கு எண்ணும் மையத்தில் வாக்குப்பதிவு எந்திரங்கள் பாதுகாப்பு அறைகளில் வரிசை எண்கள் அமைத்து வாக்குப்பதிவு எந்திரங்கள் வரிசைப்படுத்தி வைப்பதற்கான பணிகள் மற்றும் வாக்கு எண்ணும் அறைகளில் வாக்கு எண்ணிக்கையின்போது முகவர்கள் வாக்கு

எண்ணிக்கையை பார்வையிட ஏதுவாக பாதுகாப்பு தடுப்புகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதையும், சிசிடிவி செயல்பாடுகளையும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் வாக்கு எண்ணும் மையத்தில் வாக்குப்பெட்டிகளை பாதுகாப்பாகவைப்பதற்கான அறை வாக்கு எண்ணும் மையங்களில் தடுப்புகள் அமைக்கும் வசதி, தடையில்லா மின்சார வசதி, ஜெனரேட்டர் வசதி,

தேர்தல் பார்வையாளர்கள் அறை, தேர்தல் நடத்தும் அலுவலரின் அறை, காவல் கட்டுப்பாட்டு அறை, கணினி அறை, இணையதள மற்றும் கணினி வசதியுடன் கூடிய ஊடக மைய அறை, மருத்துவக்குழுவினருடன் மருத்துவ அறை, சுகாதாரமான குடிநீர் வசதி, கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளையும் முழுமையாக ஏற்படுத்த வேண்டுமென துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. என கூறினார்.

உதவி தேர்தல் அலுவலர் பூங்கோதை, துறை அலுவலர்கள், பணியாளர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.



## தருமபுரி சட்டமன்றத் தொகுதியில்

# பாமக வேட்பாளர் சௌமியா அன்புமணி தீவிர வாக்கு சேகரிப்பு

தருமபுரி ஏப்ரல் 22

தருமபுரி சட்டமன்ற தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் பாமக வேட்பாளர் சௌமியா அன்புமணி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

மேலும் வெள்ளக்கல் மற்றும் மல்லிக்குட்டை தீர்த்தகுளம் உள்ளிட்ட 10 க்கும் மேற்பட்ட பகுதிகளில் கிராமம் கிராமமாக சென்று வேட்பாளர் சௌமியா அன்புமணி மாம்பழம் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். அப்போது அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். இதைத் தொடர்ந்து அவர் கூறியதாவது. அதிமுக தலைமையிலான அரசு அமைந்தவுடன் மகளிர் உரிமை தொகை ரூ. 2000 ஆக உயர்த்தி வழங்கப்படவேண்டும். விவசாயிகளை காக்க காவேரியிலிருந்து கடலில் கலக்கும் உபரி நீரை மீன் மோட்டார் மூலம் ஏரி, குளம் ஆகியவைகளில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் . சிப்காட் பணி விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். ஒகேனக்கல் திட்டம் செயல்படுத்தப்படும். தருமபுரி முதல் மொரப்பூர் வரை ரயில்வே பணி விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் . மல்லிக்குட்டை தீர்த்தகுளம் சாலை சீரமைக்கப்படும் என்றார்.

பாஜக மாவட்ட செயலாளர் சரவணன் , பாமக சாந்தமூர்த்தி, அதிமுக நல்லம்பள்ளி ஒன்றிய செயலாளர் பழனி மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் உடனிருந்தனர்.



சென்னைமாதவரத்தில்புதுபொலிவுடன்ஏழாவதுகிளைஜெயச்சந்திரன்டெக்ஸ்டைல்ஸ் கோலாகல திறப்பு விழா நடைபெற்றது, விழாவுக்கு வருகை தந்த அனைவரையும் கடை உரிமையாளர் ஜெயச்சந்திரன், நிர்வாக இயக்குனர் சுந்தரலிங்கம், சிஇஓ, வினோத் சுப்பிரமணியன் இவர்கள் வரவேற்றனர்,

## குழித்துறையில்

# திருமணமான 4 மாதத்தில் இளம் பெண் தற்கொலை; ஆர்டிஓ விசாரணை



களியக்காவிளை, ஏப்.22

குழித்துறை அருகே பரமன்தலை புத்தன் வீட்டை சார்ந்த கண்டன் மகள் நிஷா(19). இவருக்குதிருமணமாகி 4 மாதங்கள் ஆகியுள்ளது. இந்நிலையில் கணவன்,மனைவிஇடையே அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டுள்ளது. இதில் மனவேதனை அடைந்த நிஷா தனது தகப்பனார் வீட்டில் இருந்து வந்தார்.

சம்பவத்தன்று நிஷா கணவரை தொடர்பு கொள்ள போன் செய்துள்ளார். ஆனால் கணவர் போன் எடுக்காமல், சுவிட்ச் ஆப் செய்துள்ளார். இதனால் வேதனையடைந்த நிஷா இரவு வீட்டின் மேல் மாடிக்கு சென்று சேலையில் தூக்கு மாட்டி தற்கொலை செய்துள்ளார். இதனை பார்த்த தாயார் மகளை காப்பாற்றும் பொருட்டு சாரியை அவிழ்த்து கீழே இறக்கி ஆம்புலன்ஸ் முலம் குழித்துறை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். இவரை பரிசோதித்த டாக்டர் ஏற்கனவே நிஷா இறந்ததாக கூறியுள்ளார். ஆகவே சடலத்தை ஆசாரிபள்ளம் அரசு ஆஸ்பத்திரி பிணவறையில் வைக்கப்பட்டுள்ளது. ஆர் ,டி, ஓ விசாரணைக்கு உத்திரவிட்டுள்ளதாக கூறப்படுகிறது. விசாரணை முடிந்து பிரேத பரிசோதனை முடிந்த பிறகு சடலத்தை ஒப்படைக்க உள்ளனர்.

இது குறித்து களியக்காவிளை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்..

## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# வெடி பொருள் விற்பனை நிலையங்கள் 7 நாட்கள் மூடல்

## கலெக்டர் பிரியங்கா பங்கஜம் உத்தரவு




தஞ்சாவூர் ஏப்ரல் 22

தஞ்சாவூர் மாவட்டத்தில் சட்டசபை தேர்தலை முன்னிட்டு 7 நாட்கள் வெடிபொருள் விற்பனை நிலையங்களை மூட கலெக்டர்பிரியங்காபங்கஜம் உத்தரவிட்டுள்ளார் இந்த நிலையில் தேர்தல் நடைபெறும் நாள் மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளை யொட்டி வெடிபொருள் விற்பனை நிலையங்களை மூட கலெக்டர்பிரியங்காபங்கஜம் தெரிவித்துள்ளார் இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது

தமிழக சட்டசபை பொதுத் தேர்தல் அமைதியான முறையில் நடைபெறுவதை உறுதி செய்யும் நோக்கில், வாக்குப்பதிவு நடைபெறும் அறிந்த 23ஆம் தேதி முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை முதல் 24ஆம் தேதி வரையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வெடிபொருள் சட்டத்தின் கீழ் வெடிபொருள் விற்பனை நிலையங்கள் மற்றும் கிடங்குகள் மூட உத்தரவிடப்பட்டுள்ளது

மேலும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளான அடுத்த மாதம் மே 4 தேதியை முன்னிட்டு 2ம் தேதி முதல் 4,ம் தேதி வரை வெடிபொருள் விற்பனை நிலையங்கள்கிடங்குகள்மூடப்படுகிறது.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருமருகல் ரத்தினகிரீஸ்வரர் கோவிலில் சித்திரை திருவிழா



நாகை, ஏப் 22

நாகை மாவட்டம் திருமருகலில் ரத்தினகிரீஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. பல்வேறு சிறப்புகள் பெற்ற இந்த கோவிலில் ஆண்டுதோறும் சித்திரை திருவிழா 10 நாட்கள் நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டிற்கான திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவையொட்டி நேற்று முன்தினம் காலை அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், தனபூஜை நடைபெற்றது. மாலையில் வாஸ்து சாந்தி, அங்குரார்ப்பணம், ரிஷபந்தனம் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து நேற்றுகாலைபஞ்சமூர்த்தி வீதி உலாவும் அபிஷேக, ஆராதனையும்நடைபெற்றது. இந்தநிகழ்ச்சியில் கோவில் செயல் அலுவலர் ஜெயகுமார், அறங்காவலர் குழு தலைவர் ஆறுமுகம், கோவில் கணக்கர் சீனிவாசன், அறங்காவலர்கள் ராஜசேகர், மீனாட்சி சுப்ரமணியன், ஆலய திருப்பணி குழுவினர், திருமருகல் மற்றும் அதன் சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை திருப்பணி குழுவினர் மற்றும் கோவில் ஊழியர்கள் செய்திருந்தனர். விழா நாட்களில் தினமும் சிம்ம வாகனம், பூத வாகனம், ரிஷப வாகனம், யானை வாகனம் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் சாமி வீதி உலாவும், விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக 27ம் தேதி செட்டிப்பெண் செட்டிப் பிள்ளை திருக்கல்யாணமும், 29ம் தேதி தேரோட்டமும் நடைபெறுகிறது.

## தென்காசி சட்டமன்றத் தொகுதி

# திமுக வேட்பாளர் கலை கதிரவன் இருசக்கர வாகனத்தில் பேரணியாக சென்று இறுதிக்கட்ட தீவிர பிரச்சாரம்



தென்காசி ஏப்ரல் 22

தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக வேட்பாளர் மருத்துவர் கலைகதிரவன் 300 க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனத்தில் பேரணியாகச் சென்று பொது மக்களிடம் இறுதிக்கட்ட வாக்கு சேகரித்து தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார் அப்போது பொது மக்கள் அவருக்கு ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் வேட்பாளர்கள் பிரச்சாரம் செய்வதற்கு கடைசி நாளான நேற்று தென்காசி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் கலை கதிரவன் 300க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனத்தில் பேரணியாக தென்காசிபுதியபேருந்து நிலையத்தில் துவங்கி தென்காசி நகர முக்கிய பகுதிகளில் சென்று தேர்தல் வாக்குறுதிகள் அடங்கியதுண்டுபிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கி இறுதி கட்ட தீவிரபிரச்சாரம் செய்தார் அப்போது பொதுமக்களிடம் அவர் அளித்த வாக்குறுதிகள் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தவுடன் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படும், தென்காசியில் மினி டைடல் பார்க், குற்றாலத்தை உலக தரத்தில் சுற்றுலாத்தலமாக மாற்றப்படும்,தரமானசாலைகள் போட்டு தரப்படும்,குடிநீர் மற்றும் கழிவு நீர் குழாய்கள் மாற்றி அமைத்தல் ,இரட்டை குளம் ஜம்பு நதி கால்வாய் திட்டம் உறுதியாக நிறைவேற்றப்படும், பெருந்தலைவர் காமராஜர் பெயரில் நூலகம், சுரண்டை பகுதியில் கல்லூரி ,வருடத்தில் 365 நாட்களும் மக்கள் குறை கேட்கப்பட்டு சரி செய்ய முயற்சிக்கப்படும் என்று பொதுமக்களிடம் வாக்குறுதி அளித்தார் இறுதியாக பொதுமக்கள் அனைவரும் எனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இருசக்கர வாகன பேரணியுடன் நடைபெற்ற இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் தென்காசி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் கலை கதிரவனுடன் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஜெயபாலன் , தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

# எந்த திட்டமும் வளர்ச்சி திட்டங்களாக கூறப்பட்டாலும் அது மக்களை சென்றடையாமலும் பயன்பாட்டில் இல்லாமலும் இன்றளவும் உள்ளது

## உடுமலை பேட்டை சட்டமன்ற சுயேட்சை வேட்பாளர் நூதான பிரச்சாரம்



திருப்பூர் ஏப்: 22

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் இறுதி கட்டத்தை நோக்கிய பரபரப்பான சூழலில் உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் சுயேட்சை வேட்பாளர் ச. காளிமுத்து வித்தியாசமான முறையில் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்.

இது பற்றி வேட்பாளர் கூறியதாவது: வேட்பாளராகிய நான் எனது கிராமத்தின் திட்டங்களை மனதில் வைத்து அதை வெளிப்படுத்தும் நோக்கில் தற்பொழுது வேட்பாளராக களம் கண்டுள்ளேன்.

எனது கிராமத்தை போலவே மற்ற கிராமமும் அடிப்படை வசதிகள் இன்றி இன்றளவும் இருக்கின்றது எந்த திட்டமும் வளர்ச்சி திட்டங்களாக கூறப்பட்டாலும் அது மக்களை சென்றடையாமலும் பயன்பாட்டில் இல்லாமலும் இன்றளவும் உள்ளது இதனை வெளி கொண்டுவரும் நோக்கிலும் திட்டங்களைவிரைவாக செயல்படுத்தும் நோக்கிலும் நான் செயல் படுவேன் என உறுதி அளிக்கிறேன். அப்துல் கலாம் ஐயா வழியில் கிராமங்களில் முன்னேற்றம் தான் நாடு முன்னேற்றத்திற்கானமுதல்படி ஆகவே நான் கிராமங்களில் இருந்தே என்னுடைய அரசியலை தொடங்குகிறேன் எனவும் கூறினார்.



உயிர்மெய்த் தமிழ்ச் சங்கம், உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் சார்பில் மாநிலத் தலைவர் சேலத்து பாரதி சொல்லரசர் ஏப்ரல் 23, 2026க்கானசட்டமன்ற தேர்தலில் பொதுமக்கள் 100% வாக்களிக்க வேண்டும் என வலியுறுத்தி பல்வேறு இடங்களில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் வேண்டுகோள் துண்டறிக்கையை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அதன் ஒரு பகுதியாக பி. கந்தசாமி, கருணாகரன், சண்முகம் ,கண்ணன், நிஜாமுதீன் ஆகியோருக்கும் துண்டறிக்கை வழங்கினார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல், நடைபெறவுள்ளதையொட்டி, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஆறு சட்டமன்ற தொகுதிகளில், தேர்தல் நடைபெற மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து, செய்தியாளர்களுடனான சந்திப்பு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார், தலைமையில், நடைபெற்றது.

### பொள்ளாச்சி

## சட்டமன்றத் தொகுதியில் அனல் பறந்த இறுதி கட்ட பரப்புரை



கோவை ஏப்:22

திமுக கூட்டணி வேட்பாளர் பொள்ளாச்சி நித்தியானந்தன் அவர்கள் தனது கூட்டணி கட்சியினருடன் இணைந்து இறுதி கட்ட பரப்புரையை நிறைவு செய்தார். பரப்புரையில் வேட்பாளர் இந்த தொகுதியில் புதிய இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு, புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்படும், நகர மேம்பாடு செய்யப்படும், அரசு மருத்துவமனையை தரம் உயர்த்தப்படும் என பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றப்படும் என உறுதி அளித்தார்.



### நாகர்கோவில் தொகுதியில்

## அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவது உறுதி

### பாஜக வேட்பாளர் எம் ஆர் காந்தி உறுதி

நாகர்கோவில், ஏப். 22

நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பாரதிய ஜனதா வேட்பாளர் எம் ஆர் காந்தி எம்எல்ஏ நேற்று காலை 7:00 மணி முதல் பிரச்சாரத்தை தொடங்கினார். காலையில் எஸ்எல்பி பள்ளி மைதானத்தில் நடைபயிற்சியில் இருந்தவர்களை சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பின்னர் ராஜாக்கமங்கலம் அருகே உள்ள ஈசன்தங்கு, கள்ளக்குறிச்சி, ராஜாக்கமங்கலம், அம்மச்சியார் கோவில், விளாத்தி விளை, பூவன் குடியிருப்பு, சுண்டபற்றி விளை, தோப்புகுடியிருப்பு, எறும்புக்காடு, ராமன்புதூர், பீச் ரோடு பகுதிகளில் வாக்கு சேகரித்தார். வீடு வீடாக சென்றும் திறந்த ஜீப்பில் சென்றும் வாக்குகள் சேகரிப்பில் அவர் தீவிரமாக ஈடுபட்டார். அப்போது அவர் பிரச்சாரத்தில் பேசியதாவது: பிரதமர் மோடி இந்தியாவை வலிமையான நாடாக மாற்றி உள்ளார். தமிழ்நாட்டுக்கு வலுவான கட்டமைப்பு ஏற்படுத்த எங்கள் கூட்டணிக்கு நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும். மீண்டும் தாமரை சின்னத்துக்கு வாக்குகளை தாருங்கள். பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் திட்டம், பிரதமரின் வீடு கட்டும் திட்டம், கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம் உள்ளிட்ட பல திட்டங்கள் சிறப்பாக வந்துசேர அதிமுக பாரதிய ஜனதா கட்சிக்கு கூட்டணிக்கு வாக்குகளை தாருங்கள். என பேசினார்.

பின்னர் அவர் பத்திரிகையாளர்களிடம் கூறுகையில்:

நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதியில் கடந்த முறையை விட அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவேன். நிச்சயமாக நாகர்கோவில் தொகுதியில் மீண்டும் தாமரை வெற்றி பெற்று இந்த வெற்றியை பிரதமரிடம் சமர்ப்பிப்போம். நாகர்கோவில் தொகுதி வெற்றியை பிரதமர் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் என்றார். தொடர்ந்து மாலையில் நாகராஜா கோவில் மைதானத்தில் தனது பிரச்சாரத்தை நிறைவு செய்தார்.

## கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி தவெக வேட்பாளர் செந்தில்குமார் சூறாவளி பிரச்சாரம்



கோவை ஏப்:22

கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி தவெக வேட்பாளர் செந்தில்குமார் காந்திபுரம் 100 அடி சாலை, ஹட்கோ காலனி, காமராஜபுரம் ஆகிய பகுதிகளில் வீடு வீடாக சென்று பொது மக்களிடம் உள்ள குறைகளை கேட்டறிந்து எங்களுக்கு வாக்களியுங்கள் என்று விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். பின்பு பொதுமக்களிடம் எங்கள் தலைவரிடம் உங்கள் குறைகளை சொல்லி குறைகளை தீர்க்க நாங்கள் வழி வகுப்போம் என்று கூறினார். தொண்டர்கள் விசில் அடித்தும் பொது மக்களிடம் வாக்கு சேகரித்தினர்

### கோவை சூலூர் சட்டமன்ற தொகுதி

## தவெக வேட்பாளருக்கு என் எம் சுகுமார் சூறாவளி பிரச்சாரம்



கோவை ஏப்:22

கோவை மாவட்டம் சூலூர் சட்டமன்ற தொகுதி தவெக வேட்பாளர் என் எம் சுகுமார் சூலூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களிடம் நேரில் சென்று சந்தித்தார். பொதுமக்கள் பல்வேறு குறைகளை முன்வைத்தனர். பொதுமக்கள் வேட்பாளருக்கு வீரவால் கொடுத்தும் மாலை அணிவித்தும் ஆரத்தி எடுத்தும் உற்சாகமாக வரவேற்றனர்.

மேலும் அப்பொதுமக்கள் நீண்ட நாள் கோரிக்கையான இந்த பகுதியில் உள்ள குளம் சீரமைக்க வேண்டும், மின் விளக்குகள், மற்றும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர். இவை அனைத்தும் தலைவர் இடத்தில் சொல்லி இந்த குறைகளை தீர்ப்பேன் என்று விசில் சின்னத்திற்கு வாக்கு அளிக்குமாறு பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் தொண்டர்கள் ஏராளமான கலந்து கொண்டு விசில் படித்துக் கொண்டும் வாக்கு சேகரித்தினர்.



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (21.04.2026) தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 ஐ முன்னிட்டு தென்காசி மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்ற தொகுதிகளுக்கும் நியமனம் செய்யப்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு சீரற்ற சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யும் பணி 3rd Randamisation தேர்தல் பொதுப்பார்வையாளர்கள் .நீரஜ்குமார், (கடையநல்லூர், தென்காசி), புவனேஷ் பிரதாப்சிங், (சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர்) ஈஷா பிரியா, (ஆலங்குளம்), மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

## சித்திரை தேர் திருவிழாவில் கிருஷ்ணாபுரம் பொதுமக்கள் சார்பில் 61 வது ஆண்டு தீர்த்த குட ஊர்வலம்

நீலகிரி மாவட்டம் குன்னூரில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற தந்தி மாரியம்மன் கோவிலில் சித்திரை தேர் திருவிழா கடந்த நான்காம் தேதி துவங்கி தினமும் பல்வேறு உபயதாரர்கள் சார்பில் அம்மன் திருவீதி உலா நடைபெற்று வருகிறது.

இதில் முக்கிய தேரோட்டம், குண்டம் மற்றும் முத்து பல்லக்கு, புஷ்பப் பல்லக்கு ஆகியவை நிறைவு பெற்றுள்ளன.

இந்த நிலையில் கிருஷ்ணாபுரம் பொதுமக்கள் சார்பில் 61 ஆம் ஆண்டு திருவிழா நடைபெற்றது. தீர்த்தக்குட ஊர்வலம் மற்றும் அபிஷேகப் பொருட்கள் ஊர்வலம் நடைபெற்றது. இதில் கேரளா பாரம்பரிய செண்டை மேளங்கள் முழங்க ஊர்வலம் நடைபெற்றது. இதில் பெண்கள் நடனமாடியும் கேரள



வேடமணிந்தவர்கள் அலங்கார ஊர்வலமும் நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாலையில் அம்மன் திருத்தேரில் ஊர்வலம் நடைபெற்றது. பின்பு கிருஷ்ணாபுரத்தில் சிறப்பு வழிபாடுகளுடன் வானவேடிக்கை நடைபெற்றது. பின்பு பிரசாத விநியோகம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

### தனியார் நிறுவன ஊழியர் கொலை:

## மனைவி, கள்ளக்காதலனுக்கு இரட்டை ஆயுள் தண்டனை

ஓசூர், ஏப். 22

நீலகிரி மாவட்டம் தேவர்சோலை கிராமத்தை சேர்ந்தவர் ஜஸ்டின் ராஜசேகர் (வயது 32). இவருடைய மனைவி இந்து சன்னி (33). இவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மத்தம் அக்ரஹாரம் பகுதியில் வாடகை வீட்டில் தங்கியிருந்தனர். கடந்த 2017ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19ந்தேதி ஜஸ்டின் ராஜசேகர் மாயமானார்.

ஆனால் அவரது வீட்டில் ரத்த கரை படிந்திருந்தது. இது குறித்து அக்கம் பக்கத்தினர் மத்திகிரி போலீசில் புகார் செய்தனர். அதன் பேரில் போலீசார் இந்து சன்னியிடம் விசாரணை நடத்தினர். இந்த நிலையில் இந்து சன்னி மத்தம் அக்ரஹாரம் கிராம நிர்வாக அலுவலர் கோபு முன்னிலையில் சரண் அடைந்தார்.

அவரிடம் நடத்திய விசாரணையில், கள்ளக்காதலன் லிண்டோ (38) உதவியுடன் தனது கணவரின் கழுத்தை அறுத்து கொலை செய்து உடலை மத்திகிரி கூட்டு ரோடு அருகில் உள்ள சுடுகாட்டில் புதைத்து விட்டதாக தெரிவித்தார். இதைத் தொடர்ந்து ஜஸ்டின் ராஜசேகர் உடலை போலீசார் தோண்டி எடுத்தனர். மேலும் இது தொடர்பாக இந்து சன்னி, அவரது கள்ளக்காதலன் லிண்டோ ஆகியோரை போலீசார் கைது செய்தனர்.

இந்த வழக்கு ஓசூர் கூடுதல் மாவட்ட செசன்சு கோர்ட்டில் நடந்து வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி சந்தோஷ் நேற்று தீர்ப்பு கூறினார். அதன்படி குற்றம் சாட்டப்பட்ட இந்து சன்னி, அவரது கள்ளக்காதலன் லிண்டோ ஆகியோருக்கு இரட்டை ஆயுள்தண்டனையும், குற்றத்தை மறைத்ததற்காக 5 ஆண்டு சிறையும், ரூ.25 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு கூறினார்.

அபராதத்தை கட்ட தவறினால் மேலும் 3 மாத சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என உத்தரவிட்டார். இந்த வழக்கில் அரசு தரப்பில் வக்கீல் சின்னபில்லப்பா ஆஜர் ஆனார்.

### நகை வாங்க சென்றவரிடம்

## ரூ.2 லட்சத்தை பறிமுதல் செய்த பறக்கும்படையினர்



நாகர்கோவில், ஏப். 22

தமிழக சட்டசபை தேர்தல் நாளை மறுநாள் நடைபெற உள்ளது. இதனையொட்டி வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்கள் வினியோகத்தை தடுக்க பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவினர் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அந்த வகையில் பறக்கும் படை அதிகாரிகள் நேற்று நாகர்கோவில் வாத்தியார்விளை பகுதியில் வாகன சோதனை நடத்தினர். அப்போது அந்த வழியாக வந்த மோட்டார் சைக்கிளை அதிகாரிகள் தடுத்து நிறுத்தி சோதனை நடத்தினர். அதில் வந்த மருந்து கடை ஊழியரிடம் ரூ.2 லட்சம் இருந்தது. ஆனால் உரிய ஆவணம் இல்லாததால் அந்த பணத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இதுபற்றி மருந்து கடை ஊழியர் கூறுகையில், அட்சய திருதியையொட்டி நகை வாங்குவதற்காக பணத்தை கொண்டு சென்றதாகவும், ஆனால் அதிகாரிகள் அதை பறிமுதல் செய்து விட்டதாகவும் கூறினார்.

பின்னர் பறிமுதல் செய்யப்பட்ட பணம் தாசில்தார் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

### பெரம்பலூர் அருகே

## ரூ.2.44 கோடி பறிமுதல்: திமுக நிர்வாகியிடம் விசாரணை




பெரம்பலூர், ஏப்.22

தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளிலும் நாளை மறுநாள் (வியாழக்கிழமை) தேர்தல் நடைபெறுகிறது. சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளது. அதன்படி, உரிய ஆவணம் இன்றி கொண்டு வரப்படும் பணம், தங்கம், வெள்ளி உள்ளிட்ட பொருட்கள், தேர்தல் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்படுகிறது.

இந்த நிலையில், பெரம்பலூர் செங்குணம் பகுதியில் உரிய ஆவணமின்றி காரில் கொண்டு செல்லப்பட்ட ரூ. 2.44 கோடியை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்துள்ளனர். இதுதொடர்பாக திமுக நிர்வாகி ஜெயராமன், கார் ஓட்டுநர் ராஜேஷ் கண்ணனிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பணத்தை வருமான வரித்துறையினரிடம் ஒப்படைக்க பெரம்பலூர் தேர்தல் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு நாளை மறுநாள் நடைபெறும் சூழலில் அதிக தொகை பறிமுதல் செய்யப்பட்டுள்ள நிலையில் மாவட்டம் முழுவதும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் வடக்கு வீதி அருள்மிகு பிடாரி ஸ்ரீ மாகாளியம்மன் நூதன விமான அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா



செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் வடக்கு வீதி அருள்மிகு பிடாரி ஸ்ரீ மாகாளியம்மன் நூதன விமான அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா

அருள்மிகு ஸ்ரீ பிடாரி மாகாளி அம்மனுக்கு 20.4.2026 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மேல் 10:30 மணிக்குள்ளாக நூதன விமானம் ஜீரண தாரண அஷ்டபந்தனை மகா கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது முன்னதாக மங்கள வாத்தியங்கள் வான வேடிக்கைகள் திருக்கைலாய வாத்தியம் முழங்க கும்ப கலசம் கோவிலை வலம் வந்து முதலில் விமான கோபுரங்களுக்கும் பிடாரி ஸ்ரீ மாகாளியம்மன்க்கு சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழா நடைபெற்றது விழாவினை திரு குணசேகரன் ஐயா அவர்கள் தலைமையில் பிடாரி ஸ்ரீ மாகாளியம்மன் விழா குழுவினர் செய்யூர் கிராமத்தினர் பொதுமக்கள் முன்னிலையில் நடைபெற்றது அனைவருக்கும் சிறப்பான அன்னதானம் வழங்கப்பட்டது.

# நாளை ஓட்டுப்பதிவு வாக்காளர்கள் எடுத்து செல்ல வேண்டிய ஆவணங்கள்




நாளை ஓட்டுப்பதிவு நடப்பதை முன்னிட்டு வாக்காளர்கள் எடுத்து செல்ல வேண்டிய ஆவணங்கள் குறித்து, கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழக சட்டசபை பொதுத்தேர்தல் நாளை (வியாழக்கிழமை) நடக்கிறது. வாக்காளர்கள் ஓட்டுப்பதிவு நாளன்று ஓட்டளிக்க ஏதுவாக, வாக்காளர் தகவல் சீட்டு வீடு வீடாக வினியோகிக்கப்பட்டு வருகிறது. ஓட்டுச்சாவடியில் தங்கள் அடையாளத்தை காண்பிப்பதற்கான வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத வாக்காளர்கள் கீழ்க்கண்ட மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களான அடையாளமாக காட்டலாம். அதன்படி ஆதார் அட்டை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்ட பணி அடையாள அட்டை, புகைப்படத்துடன் கூடிய வங்கி, அஞ்சலக கணக்கு புத்தகங்கள், தொழிலாளர் நல அமைச்சக திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மருத்துவ காப்பீட்டு அட்டை, ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு அட்டை, ஓட்டுனர் உரிமம், வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை, தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமை பதிவாளரால் வழங்கப்பட்ட திறன் அட்டையை காண்பிக்கலாம். அதேபோல, இந்திய கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்), புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், மத்திய மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள், நாடாளுமன்ற சட்டசபைக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை, இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட இயலாமைக்கான தனித்துவமான அடையாள அட்டை இவற்றில் ஒன்றை வாக்களிக்க எடுத்து செல்லலாம். இவ்வாறு, அவர் தெரிவித்துள்ளார்.

# 100 சதவீத ஓட்டுப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள, 6 சட்டசபை தொகுதிகளில், 100 சதவீதம் ஓட்டளிப்பதை வலியுறுத்தி, ஓசூர் இன்டஸ்ட்ரீஸ் அசோசியேஷன், ஓசூர் மக்கள் சங்கம் மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில், ஓசூரில் நேற்று விழிப்புணர்வு நடைபயண பேரணி நடந்தது. ஓசூர் காமராஜ் காலனி மாநகராட்சி மைதானத்திலிருந்து துவங்கிய பேரணியை, ஓசூர், தளி தொகுதி தேர்தல் பொது பார்வையாளர் பண்வே ராகுல் துக்காராம், மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். பேரணியில், 100 சதவீதம் ஓட்டளிக்க வலியுறுத்தி, நாட்டுப்புற கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் நடந்தன. உழவர் சந்தை, தாலுகா அலுவலக சாலை, எம்.ஜி., ரோடு, நேதாஜி ரோடு வழியாக சென்று, மீண்டும் காமராஜ் காலனி மைதானத்தில் பேரணி நிறைவு பெற்றது. ஓசூர் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஆக்ரிதி சேத்தி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கவிதா மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள், மாணவ, மாணவியர், பொதுமக்கள் என, 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## நடிகர் கையில் நாடா?

# சினிமா மோகத்தால் மாறும் தமிழக அரசியல்!



நாகர்கோவில், ஏப்ரல் 22

சீர்திருத்தங்களை கொண்டு வருவேன் எனக் கூறி தமிழக மக்களை ஆட்சி செய்ய முற்படும் முன்னாள் நடிகரும் இந்நாள் அரசியல் கட்சித் தலைவருமான விஜய் ஒரு முற்போக்கு சிந்தனைவாதி என இன்றைய இளைய தலைமுறையினர் நினைத்து கடும் வெயிலிலும் அவருக்காக காத்து நிற்கின்றனர். இதில் வேடிக்கை என்னவென்றால், மக்களை காக்கவும், மக்களுக்கு நல்லது செய்யவும் நினைத்து அரசியல் களத்திற்கு விஜய் வந்துள்ளார் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் விஜயின் எண்ணம் அனைத்தும் வேறு. அவர் திரைத்துறை மூலம் கிடைக்கும் பணத்தை உதறி தள்ளி விட்டு வந்துவிட்டதாக நாம் நினைத்து உள்ளோம். ஆனால் அவருடைய எண்ணம் ரசிகர் கூட்டங்களை காட்டி தன்னை எதிர்த்த சில முக்கிய தலைவர்களை எதிர்க்கவே அரசியல் களத்திற்கு வந்துள்ளார் என்பதைபுரிந்துகொள்ள வேண்டும்.

சமூக சீர்திருத்தம் மற்றும் பகுத்தறிவு சிந்தனைகளை முன்னெடுத்தல் போன்ற கொள்கைகள், பெரியார் மற்றும் காமராஜர் போன்ற தலைவர்களின் சித்தாந்தங்களைப் பின்பற்றி, அவற்றை மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகள் மூலம் மக்களிடம் கொண்டு செல்வதாக கூறும் விஜய், இதுவரை ஒரு நிகழ்ச்சியில் கூட இன்றைய இளம் தலைமுறையினர்கள் மது மற்றும் போதைப் பொருட்களை பயன்படுத்தாதீர்கள் என்று கூறியது இல்லை.

திரைப்படத்தில் ஹீரோவுக்கு பின்னால் ஆயிரக்கணக்கானஜனங்கள் இருப்பதாக காண்பிக்கப்படுவதை விஜய் நிஜ வாழ்க்கையிலும் சாத்தியப்படுத்த மட்டுமே முயற்சி செய்து வருகிறார். இவர் தமிழ்நாட்டு மக்களிடையே மாற்றத்தை ஏற்படுத்த நினைத்திருந்தால் தான் நடித்த திரைப்படங்களின் டிக்கெட் கட்டணத்தை தன்னுடைய போராட்ட குணத்தினால் மாற்றி இருக்கலாமே; ஒரு திரைப்படத்திற்கு அவர் வாங்கும் சம்பளம் பல நூறு கோடிக்கும் மேல் உள்ளதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன. அவருடைய சம்பளத்தை சில ஆயிரங்களுக்கு உள்ளாகவோ, இல்லை ஐந்து லட்சத்திற்கு உள்ளாகவோ வாங்கி இருக்கலாமே ஏன் அப்படிச் செய்யவில்லை சிந்திக்க வேண்டாமா? தமிழ்நாட்டு மக்களை டிக்கெட் கட்டணம் மூலம் சுரண்டிய இவர் தமிழக மக்களுக்கு நல்லது செய்வாரா?

தனது நடிப்பால் தமிழ்நாட்டில் உள்ள இளைய தலைமுறையினரை கவர்ந்து வைத்திருக்கும் விஜய் திரைப்படம் நடிக்க வந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டது. ஏன் அவர் ஒரு நடிகராக மட்டுமே இத்தனை ஆண்டு காலம் இருந்து விட்டார்?

தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற எண்ணம் அப்போதே அவருக்கு வந்திருக்க வேண்டாமா? தமிழ்நாட்டு மக்கள் எத்தனையோ விதமான போராட்டங்களை போராடி இன்றளவும் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர். தமிழ்நாடு மக்களுக்கு எதிராக மத்தியில் ஆளும் அரசு எத்தனையோ விதமான அடக்குமுறைகளையும் ஒடுக்கு முறைகளையும் கொண்டு வந்த போது போராடியவர்கள் திராவிட கட்சியை சேர்ந்த தலைவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த தலைவர்களும் தானே.

அப்போது எல்லாம் வாயை மூடி மௌனமாக பல ஆயிரம் கோடிகளை சம்பாதித்து விட்டு திடீரென தமிழ்நாட்டு மக்களை காக்க போகிறேன் எனக் கூறி கட்சியையும் கொடியையும் அறிமுகப்படுத்தி இளைய சமுதாயத்தினரை கொளுத்தும் வெயிலில் இரையாக்கி, பச்சிளம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பல உயிரை காவு வாங்கிவிட்டு காக்க வந்த கடவுள் போல் தன்னை காண்பிக்கும் விஜய் சினிமாவில் போராளியாக நடித்திருக்கலாம். ஆனால் நிஜ வாழ்க்கையில் வீதியில் இறங்கி போராடியது உண்டா? தமிழ்நாட்டு மக்களுக்காக சிறை சென்றது உண்டா?

இதில் எதுவும் கண்டிராத நடிகர் விஜய்க்கு தமிழ்நாட்டு மக்கள் கல்விக்காக மத்திய அரசு வழங்கும் நிதியை மும்மொழி கொள்கைக்காக நிறுத்தி வைத்த போது மூன்றெழுத்து நடிகையுடன் இன்ப உலா சென்றது ஞாபகத்திற்கு வரவில்லை போலும்.

இன்று அரசியல் களத்திற்கு வந்துவிட்டு காமராஜர் கல்வி மையங்கள் அமைப்பேன் என்று கூறுவதை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? சமூக சீர்திருத்தவாதி பெரியார் கொள்கையை கடைபிடிப்பதாக கூறும் விஜய் மத்திய அரசின் மும்மொழிக் கொள்கையை எதிர்த்து தமிழ்நாட்டு தலைவர்களுடன் கைகோர்த்து போராடி இருக்க வேண்டாமா? மத்திய அரசின் குலக்கல்வி திட்டத்தை எதிர்த்த காமராஜரை கொள்கை தலைவனாக ஏற்றுக்கொண்ட விஜய் மத்திய அரசின் குலக்கல்விதிட்டத்திற்கு அப்போதே எதிர்ப்பு தெரிவித்து இருக்க வேண்டாமா? மேலும் தமிழக வேலை வாய்ப்பில் 75% தமிழக இளைஞர்களுக்கே வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என விஜய் ஒரு உத்தரவாதம் கொடுத்திருந்தார். தமிழ்நாட்டில் முக்கிய துறைகளிலும், பொறுப்புகளிலும் வட மாநிலத்தவர் அதிகாரிகளாக நியமிக்கப்பட்ட போது எதிர்த்து ஒரு குரல் கூட கொடுக்கவில்லை. அப்பொழுது வாயை மூடி வேடிக்கை...




தென்காசி அம்பை ரோடு ஆசாத் நகரில் (21.04.2026) தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஐ முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் சார்பில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி நடைபெற்ற மினி மாரத்தான் போட்டியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்தார்

# கிருஷ்ணகிரி மாவட்ட தேர்தல் பணி தமிழக சிறப்பு பார்வையாளர் ஆய்வு




கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், தளி, வேப்பனஹள்ளி, பர்கூர், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை ஆகிய, 6 சட்டசபை தொகுதிகளில் நடக்கும் தேர்தல் பணி குறித்த ஆலோசனை கூட்டம், ஓசூரில் நேற்று நடந்தது. தமிழகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் சிறப்பு பார்வையாளர் பிரதாப் சிங் தலைமை வகித்து, தேர்தல் பார்வையாளர்கள், தேர்தல் செலவின கண்காணிப்பு பொறுப்பு அலுவலர்கள் ஆகியோர், தங்களுக்கு ஒதுக்கிய பணிகளை, இந்திய தேர்தல் ஆணைய வழிகாட்டுதலின் படி, குறித்த காலத்திற்குள் மேற்கொள்ள அறிவுறுத்தினார். கிருஷ்ணகிரி மாவட்ட, 6 சட்டசபை தொகுதிகளின் தேர்தல் பொதுபார்வையாளர்கள்அனில்குமார் சிங், சவுரவ் பாபு, பண்வே ராகுல் துக்காராம், செலவின பார்வையாளர்கள் சந்தோஷ் குமார், சதீஷ், ராகுல் சிங்கானியா, காவல் பார்வையாளர் திருட்டிமான் சர்க்கார், மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார், எஸ்.பி., தங்கதுரை, டி.ஆர்.ஓ., சாதனைக்குறள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு 100% வாக்களிப்பதை வலியுறுத்தி, சேலம் மகாத்மா காந்தி விளையாட்டு மைதானத்தில் மாபெரும் இரு சக்கர வாகன பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் அ.அருண் தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் (21.04.2026) கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். உடன் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி வாணிஈஸ்வரி, மாவட்ட விளையாட்டு அலுவலர் (பொ) திருமதி கண்மணிதேவி, ரோட்டரி சங்க நிர்வாகி திரு.ஏ.ஆர். சதீஷ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# மசோதாக்களை தோற்கடித்ததால் என்ன சாதித்தீர்கள்? ஆந்திர முதல்வர் பேச்சு




கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டையில் நடைபெற்ற பாரதிய ஜனதா கட்சி வேட்பாளரை ஆதரித்து பிரச்சாரம் செய்து வாக்கு சேகரித்த போது தில்லியை தமிழ்நாடு வென்றது என இந்தியா முழுவதும் பேசி மசோதாக்களை தோற்கடித்து என்னசாதித்தீர்கள் என ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு கேள்வி எழுப்பியுள்ளார். கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி பாஜக வேட்பாளர் நாகேஷ் குமார், ஓசூர் தொகுதி அதிமுக வேட்பாளரும், முன்னாள் அமைச்சருமான பி.பாலகிருஷ்ண ரெட்டி ஆகியோரை ஆதரித்து ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு

தேன்கனிக்கோட்டையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசியது: பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு வழங்க நினைத்தவர் பிரதமர் மோடி. மசோதாக்கள் நிறைவேறியிருந்தால் தமிழகத்துக்கு 20 எம்.பி.க்கள் எண்ணிக்கை உயர்ந்திருக்கும். தில்லியை தமிழ்நாடு வென்றது எனக்கூறி என்ன சாதித்தீர்கள்?

ஒரு காலத்தில் தமிழகம் அனைத்திலும் முன்னிலையில் இருக்கும். ஆனால், தற்போது பெங்களூரு, ஹைதராபாத்துடன் போட்டிபோடும் நிலையில் சென்னை உள்ளதா? இரட்டை என்ஜின் ஆட்சி அமைந்தால் மாநிலம் வளர்ச்சி அடையும். ஆந்திர மாநிலத்தில் பிரதமர் மோடியுடன் இணைந்து தேசிய ஜனநாயக கூட்டணி போட்டியிட்டது. 94 சதவீத இடங்களைக் கைப்பற்றி, வரலாற்றில் இதுவரை இல்லாத வெற்றியை பெற்றுள்ளோம். தமிழகம் மீண்டும் பழைய பெருமைக்கு வர வேண்டுமானால், இரட்டை என்ஜின் அரசு தேவை. பிரதமர் மோடி 12 ஆண்டுகள் திறமையான ஆட்சியைக் கொடுத்துள்ளார். ஒரு பக்கம் வளர்ச்சி; இன்னொரு பக்கம் மக்கள் நலன்; மற்றொரு பக்கம் சிறப்பான ஆட்சி என இந்த மூன்றையும் இணைத்து நாட்டின் எதிர்காலத்தை விரைவுபடுத்தும் நபராக இருந்துள்ளார். தமிழர்களின் நலன், நாட்டின் நலனைக் கருத்தில் கொள்ளாத சில கட்சிகள் உள்ளன. அமராவதியில் 5,000 ஏக்கரில், பெங்களூரு மற்றும் ஹைதராபாத்தைவிட சிறந்த விமான நிலையத்தை அமைக்க திட்டமிட்டுள்ளோம். இதுவே வளர்ச்சி. இதுவே போட்டித்தன்மை. மத்தியில் மோடியின் ஆட்சி பலப்பட வேண்டும். அதற்கு தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெற வேண்டும் என்றார். இதில், பாஜக மாநிலத் துணைத் தலைவர் கே.எஸ்.நரேந்திரன், பாஜக மண்டல பொறுப்பாளர் கே.பி.ராமலிங்கம், முன்னாள் எம்.பி. நரசிம்மன், மாவட்டத் தலைவர் நாராயணன், தொழில்பிரிவு மாநிலத் தலைவர் ஜி.பாலகிருஷ்ணன், முன்னாள் மாவட்டத் தலைவர் எம்.நாகராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.